





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.8.2025) இராயபுரம் மண்டலம் போஜராஜன் நகரில் 30.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வாகனச் சுரங்க பாதையினை திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்வில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.மூர்த்தி, ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நிலைக் குழுத் தலைவர் (நகரமைப்பு), தா. இளைய அருணா, இராயபுரம் மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி சு.கீதா சுரேஷ், திருமதி பா.வேளாங்கண்ணி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### வடசென்னை மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேறியது!

# போஜராஜன் நகரில் ரூ.30.13 கோடியில் சுரங்கப்பாதை!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 19 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.8.2025) இராயபுரம் மண்டலம் போஜராஜன் நகரில் 30.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வாகனச் சுரங்க பாதையினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

வடசென்னை கொருக்குப் பேட்டை பகுதியில் உள்ள போஜராஜன் நகர் மூன்று புறமும் இரயில்வே இருப்புப் பாதையினால் சூழப்பட்டுள்ளதால், இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் ரயில்வே சந்திப்பு கடவின் மூலமே வெளியே செல்ல முடியும்.

மேலும் அவசர காலங்களில் அவர்களால் வெளியே செல்வது மிகவும் சிரமமாக இருந்தது. எனவே இங்கு வசிக்கும் பொதுமக்கள் உள்ளிட்ட வடசென்னைப் பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, போஜராஜன் நகரில் வரையறுக்கப்பட்ட வாகன சுரங்கப்பாதை (Limited Use Subway) அமைக்கும் பணி கடந்த 2023 ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 30.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது.

இச்சுரங்கப்பாதையின் நீளம் 207மீட்டர் (இரயில்வே பகுதி 37 மீட்டர் உட்பட), அகலம் 6 மீட்டர் ஆகும். மேலும், மழைக் காலங்களில் மழை நீரை வெளியேற்ற ஒரு நீர் சேகரிக்கும் கிணறு, 85HP திறன் கொண்ட மோட்டார் பம்புகள் மற்றும் ஒரு ஜெனரேட்டர் நிறுவப்பட்டுள்ளன.

**1 லட்சம் மக்கள் பயன்பெறுவர்!**

இப்பணியின் மூலம் போஜராஜன் நகர், சீனிவாசன் நகர் மற்றும் மின்ட் மார்டன் சிட்டி ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் ஒரு லட்சம் பொதுமக்கள் பயன் பெறுவார்கள்.

மேலும், போஜராஜன் நகர் வாகனச் சுரங்கப்பாதையினை யொட்டி 1.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் விளையாட்டுத் திடல், ரவுண்டானா பூங்கா மேம்பாட்டுப் பணிகள், ரவுண்டானாவைச் சுற்றிலும் நடைபாதை மற்றும் பொதுமக்கள் அமர்வதற்கான ஓய்வுக்கூடம், ஆகியவற்றையும் துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.மூர்த்தி, ஆர்.டி.சேகர், ஜே. ஜே.எபினேசர், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நிலைக் குழுத் தலைவர் (நகரமைப்பு), தா. இளைய அருணா, இராயபுரம் மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி சு.கீதா சுரேஷ், திருமதி பா.வேளாங்கண்ணி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கடலூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், ஆக. 19 -

வருகின்ற 21.08.2025 வியாழக்கிழமை மாலை 04.30 மணியளவில் காட்டு மன்னார்கோயில் எம்.ஆர்.கே கலையரங்கத்தில் நடைபெறும் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞர்அணி மாவட்ட மாநகர ஒன்றிய - நகர - பகுதி பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு: -

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தல்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணியின் மாவட்ட மாநகர ஒன்றிய - நகர - பகுதி பேரூர் கழக இளைஞர்அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம் எனது தலைமையிலும், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக் முன்னிலையில் 21.8.2025, வியாழக்கிழமை அன்று மாலை 04.30 மணி அளவில், காட்டுமன்னார்கோயில் எம்.ஆர்.கே. கலையரங்கத்தில் நடைபெற உள்ளது.

அது சமயம் இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட - மாநகர - நகர, பகுதி பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### வண்டலூர் காவல்துறை பயிற்சியகத்தில்

# 190 துணை மாநில வரி அலுவலர்களுக்கு சிறப்பு பயிற்சி முகாம்!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – பி.மூர்த்தி தொடங்கி வைத்தனர்!

சென்னை, ஆக. 19 -

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி, நேற்று (18.08.2025) வண்டலூர் தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் , சமீபத்தில் பதவி உயர்வு பெற்ற 190 துணை மாநில வரி அலுவலர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோரால் தொடங்கி வைக்கப்பட்டது.

வணிகவரி அலுவலர்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன், ரூ 77 லட்சம் மதிப்பீட்டில் 18.08.2025 முதல் 30.09.2025 வரை நடைபெறும் இந்த பயிற்சி முகாம், வணிகவரித் துறை செயல்பாடுகள் தொடர்பான சட்டங்கள், விதிகள் மற்றும் நடைமுறைகள், சட்டப் பூர்வ கடமைகள், சமீபத்திய வரிச்சட்டங்கள், வரிச் சேவை மேம்பாட்டுத்திட்டங்கள், அதிநவீன தகவல் தொழில்நுட்ப பயன்பாடு குறித்த விழிப்புணர்வு, தினந்தோறும் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு யோகா உள்ளிட்ட பயிற்சிகளும் துறை உயர் அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரி ஆணையர் எஸ். நாகராஜன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திருமதி. தி.சினேகா, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வரலட்சுமி மதுசூதனன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியக அலுவலர்கள் மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, ஆக. 19 -

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (19.8.2025- செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1.’ஓரணியில் தமிழ்நாடு’

2.கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தெரிவித்துள்ளார்.

### ஓய்வூதிய திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட சந்தாதாரர்களில்

# தமிழ்நாட்டிலிருந்து பெண் பங்கேற்பாளர்களின் பிரதிநிதித்துவம் என்ன?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 19 -

மக்களவையில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் எழுப்பிய கேள்விகள் வருமாறு: -

2024-25 வரை அடல் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் (APY) பதிவு செய்யப்பட்ட சந்தாதாரர்களின் மொத்த எண்ணிக்கை என்ன? 2025-2026 நிதியாண்டில் புதிய சேர்க்கைகளுடன்.

ஒட்டுமொத்த சந்தாதாரர்களில் தமிழ்நாட்டிலிருந்து பெண் பங்கேற்பாளர்களின் பங்கு மற்றும் பிரதிநிதித்துவம் என்ன?



ஒன்றிய அரசு அதிகபட்ச உத்தரவாத ஓய்வூதியத் தொகையை மாதத்திற்கு ரூ.5,000 இலிருந்து ரூ.10,000 ஆக அதிகரிக்க முன்மொழிகிறதா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

முன்மொழியப்பட்ட அதிகரித்த ஓய்வூதியப் பலனை செயல்படுத்துவதற்கான நிபுணத்துவ காலக்கெடு .

தமிழ்நாட்டில் உள்ள அமைப்புசாரா துறை தொழிலாளர்களுக்கு கல்வி கற்பித்து சேர்ப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் அதன் தாக்கம் எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது ?

குறிப்பாக தென் மாநிலத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் பயனாளிகள் மத்தியில் அவர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு ஏதேனும் மதிப்பீட்டு அறிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளனவா?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.



வண்டலூர், தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக அரங்கத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், சமீபத்தில் பதவி உயர்வு பெற்ற 190 துணை மாநில வரி அலுவலர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாமை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் தொடங்கி வைத்து, அவர்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரி ஆணையர் எஸ்.நாகராஜன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திருமதி. தி.சினேகா, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியக அலுவலர்கள் மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.